# இறைத்தூதன்

கத்தோலிக்க வார இதழ்


உன்னைப் போல் ஓர் இறைவாக்கினனை அவர்களுடைய சகோதரர்களினின்று நான் அவர்களுக்காக ஏற்படுத்துவேன். என் வார்த்தைகளை அவனுடைய வாயில் வைப்பேன். நான் கட்டளையிடுவது அனைத்தையும் அவன் அவர்களுக்குச் சொல்வான். என் பெயரால் அவன் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவி கொடாதவனை நான் வேரறுப்பேன்
இச 18:18-19



# பங்கு சமூகங்களே: நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகியவற்றின் முகவர்கள்

## பேராயரின் மறைக்கல்வி ஞாயிறு செய்தி

பங்கு சமூகங்கள்: நம்பிக்கை எதிர்நோக்கு அன்பு ஆகியவற்றின் முகவர்கள் நாம் தனியாக வாழவேண்டும் என கடவுள் ஒருபோதும் விரும்புவதில்லை. சமூகங்களாக, பிறரோடு சேர்ந்து செபிக்கவும், வேலை செய்யவும், பணி செய்யவும், பகிர்ந்துகொள்ளவும், குணமளிக்கவும் நாம் அழைக்கப்பட்டுள்ளோம். நம் பங்கு சமூகங்கள், பலவிதமான பிண்ணனியைக் கொண்டவர்கள், பல்வேறு வயதினர், பலவித அனுபவங்களைக் கொண்டவர்களைக் கொண்டுள்ளன. இவர்கள் கடவுளின் இரக்கத்தால் ஈர்க்கப்பட்டு, பங்கின் அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபடுவது, சமூகமாக திருப்பலியில் ஒன்றிணைவது ஆகியவற்றின் வழியாக, கடவுளின் அழைப்புக்கு தாராள உள்ளத்தோடு மறுமொழி கொடுக்கின்றார்கள். குறைபாடுள்ள மக்களாக இருக்கும் சமூகத்தின் உறுப்பினர்கள் பல்வேறு சவால்களோடும், மனித பலவீனங்களோடும் போராடி, தங்களை எதிர்க்கும் சக்திகளால் அச்சுறுத்தப்படுகின்றார்கள். திருஅவை சமூகங்களுக்குள்ளும் முழுமையான திருஅவையிலும், உள்ள ஒவ்வொரு அசைவும், செயல்களும், கத்தோலிக் கரல்லாதவர்களால் மட்டுமல்ல, பிற பங்கு மக்கள், புதிதாக திருமுழுக்கு பெற்றவர்கள் அனைவராலும், ஆராய்ந்தறியப்படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

எனவே பங்கு சமூகமாக ஒன்றிணைந்து, நம்முடைய செயல்களாலும், வார்த்தைகளாலும் பங்கில் ஒரு நல்ல முன்மாதியான சாயலை நாம் கட்டியெழுப்ப வேண்டும். ஏனென்றால் தூதுரைப்பது நம்முடைய திருஅவையின் முக்கிய பங்காக அமைகிறது. நம்பிக்கை, எதிர்நோக்கு மற்றும் அன்பு ஆகிய நற்பண்புகள் ஒவ்வொரு கிறிஸ்துவரின் வாழ்க்கைக்கும் அடிப்படையான அடித்தளமாகும் (1 கொரி:13:13) பங்கு சமூகத்தின் உறுப்பினர்களான நாம், கிறிஸ்துவை ஆடையாக அணிந்துகொள்ள வேண்டும். ( கலா:3:27) நம்பிக்கையையும் அன்பையும் மார்புக் கவசமாகவும், மீட்புப்பெறுவோம் என்னும் எதிர்நோக்கைத் தலைக்கவசமாகவும் அணிந்து கொள்வோம் (1 தெசலோ:5:8) இவற்றைக் கடைபிடித்து ஒருவரோடு ஒருவர், இணைந்திருப்பதன் வழியாகக் கடவுளை மகிமைப்படுத்துவோம். நம்மையேத் தாழ்த்தி நற்பண்புகளைக் கடைப்பிடித்தால் நாம் அவற்றின் கனிகளைப் பெற்றுக்கொள்வோம். பங்கு சமூகத்தைப் பாழாக்கும் உலகைச் சார்ந்த மதிப்பீடுகளினால் நாம் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். நம்பிக்கை, எதிர்நோக்கு மற்றும் அன்பு ஆகிய நற்பண்புகளை நாம் வாழ்ந்துகாட்ட அன்னை மரியாவைப் பின்பற்றவும், அன்பையும், அமைதியையும் கொண்டுவரும் கருவியாக நாம் செயல்படவும் தூய ஆவியானவர் நம்மில் இருந்து செயலாற்ற அவரை நாம் அனுமதிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால், அதிகமான மக்கள் ஈர்க்கப்படவும். சமூகத்தில் இறந்து போயிருந்த அவர்களின் வாழ்வு மீண்டும் உயிர்பெற்று, கடவுளின் அருளைப் பெற்றவர்களாகவும், கடவுளின் திராட்சைத் தோட்டத்தில் இணையமுடியும். பங்கு சமூகத்தின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் என்ற வகையில் , இந்த நற்பண்புகளை நாம் இழக்கக்கூடாது. இல்லையென்றால், கடவுளின்




உண்மையான போதனைகளில் இருந்து நாம் வழிதவறிச் செல்லக்கூடும். மேலும் நமது ஆன்மீகம் மற்றும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதில் சமரசம் செய்து கொள்வோம். பெருமை, சுய நீதி, அதிருப்தி, பொறாமை ஆகியவற்றால் நுகரப்பட்டு, பிறரைத் தீர்ப்பிடத் தொடங்குவோம்.

இதன் தொடர்ச்சியாக, நம் சொந்த தவறுகள், பாவங்கள் நம் பார்வைக்கு மறைக்கப்பட்டிருக்கும். இது ஒருவருக் கொருவர் பிளவுபடவும், சகிப்பின்மைக்கும் வழிவகுக்கும். "பார்வையற்ற ஒருவர், பார்வையற்ற வேறொருவருக்கு வழிகாட்ட இயலுமா?(லூக்கா 6:39-42) என்ற இறைவார்த்தையைப் போல நாம் பிறரை அன்பு செய்யவோ, இரக்கம் காட்டவோ அல்லது தொலைந்துபோன ஆடுகளை இறைவனிடம் மீண்டும் கொண்டு வந்து சேர்க்கவோ முடியாது. நம்பிக்கை, எதிர்நோக்கு மற்றும் அன்பின் முகவர்கள் என்ற வகையில் நம்முடைய பங்களிப்பை எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது. நம்முடைய நல்லாயன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய வாழ்வில் செய்ததுபோல, நாமும் "இந்தப் பூமிக்கு உப்பாகவும், உலகிற்கு ஒளியாகவும் ( மத்தேயு: 5:13-16) நம்முடைய ஒவ்வொரு சிறிய பங்களிப்பின் மூலம் தரமுடியும். ஒவ்வொருவரிலும், கிறிஸ்துவைக் காணவும், பிறருக்கு மகிழ்ச்சியையும், குணமளித் தலையும் கொண்டு வரும் கிறிஸ்துவாகவும் திகழ்வோம். “நம் அனைவராலும், மாபெரும் காரியங்களைச் செய்யமுடியாது; ஆனால், நாம் செய்யும் ஒவ்வொரு சிறிய காரியங்களையும் மாபெரும் அன்புடன் செய்யமுடியும்" (கொல்கொத்தாவின் அன்னை திரேசா) ஆக, நம்பிக்கை, எதிர்நோக்கு அன்பு ஆகிய மூன்றுமே நிலையாய் உள்ளன; இவற்றுள் அன்பே தலை சிறந்தது.(1 கொரிந்தியர்: 13:13)

# இயேசுவில் ஒன்றிருத்திருந்தால் மட்டுமே கனிதர இயலும்

வத்திக்கான்: கடந்த ஜனவரி 25-ஆம் நாள், உரோம் மாநகரில் அமைந்துள்ள புனித பவுல் பெருங்கோவிலில் நடைபெற்ற, 54-வது கிறிஸ்தவ ஒன்றிப்பு வார நிறைவு திருவழிபாட்டில் வழங்கப்பட்ட, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மறையுரைச் சிந்தனைகள், **“என்னில் நிலைத்திருத்திருங்கள்”** என்ற இயேசுவின் அழைப்பை மையப்படுத்தி அமைந்திருந்தன.

கிறிஸ்தவ சபைகளுக்கு இடையே மிக அத்தியாவசியமான ஒன்றிப்பு நிலவுவதற்குரிய மூன்று நிலைகளும், ஒரு மரத்தின் அடிப்பாகத்தைச் சுற்றியிருக்கும் மூன்று வளையங்கள் போன்றவை என்றுரைத்துள்ள திருத்தந்தை, இந்த ஒன்றிப்பு, முதலில் இயேசுவில் நிலைத் திருப்பதிலிருந்து தொடங்குகின்றது என்றும், நிலைத்திருப்பது என்பது, அவரது அன்பை அனுபவிக்கும் இறைவேண்டலிலிருந்து ஆரம்பிக்கின்றது என்றும் கூறியுள்ளார்.

இரண்டாவது நிலை, கிறிஸ்தவர்கள் மத்தியில் நிலவும் ஒன்றிப்பு என்று கூறி, அதனை விளக்கியுள்ள திருத்தந்தை, நாம் எல்லாரும் ஒரே திராட்சைச் செடியின் கிளைகள் என்றும், ஒருவர் ஆற்றும் செயல், அடுத்தவரைப் பாதிக்கின்றது என்றும், நாம் ஒருவர் ஒருவரை அனபுகூர்வதற்கும் இறைவேண்டலே இன்றியமையாதது என்றும் கூறியுள்ளார்.

மூன்றாவது நிலை, இயேசு நமக்குக் கற்றுக்கொடுத் துள்ளதுபோன்று, நம்மை அன்புகூர்பவர்களை மட்டுமல்லாமல், அனைவரையும் அன்புகூர, தூய ஆவியார் உதவுவார் என்றும், நல்ல சமாரியர் போன்று, அனைவருக்கும் உதவக்கூடியவர்களாக இருக்கவும், நம் அன்புக்குப் பதிலன்பு காட்டாதவர்களையும்கூட அன்புகூரவும் நாம் அழைப்புப்பெற்றுள்ளோம் என்றும் கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து மற்றவருக்குப் பணியாற்றுவது, நாம் எல்லாரும் சகோதரர், சகோதரிகள் என்ற உணர்வை மீண்டும் வலுப்படுத்தும் என்று அறிவுறுத்தினார்.

# மறைக்கல்வியொட்டி பெற்றோருக்குப் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் மடல்

அன்புமிக்க பெற்றோர்களே,

நாம் புதிய ஆண்டைத் தொடங்கும் இக்காலத்தில், நம்முடைய கடந்தகால சவால்களை சமாளிக்க நமக்கு வலிமையும் தைரியமும் அளித்ததற்காக கடவுளுக்கு நன்றி கூறுகிறோம். மேலும் எதிர்காலத்தை நம்பிக்கையுடனும் எதிர்நோக்குடனும் எதிர்கொள்ள அவருடைய அருளை நாடுகிறோம்.

கடந்த ஆண்டில் நாம் எதிர்கொண்ட சவால்களில் ஒன்று நமது இளையோருக்கு மறைக்கல்வி பாடங்கள் வழங்கப்பட்ட



விதத்தில் சந்தித்த கடுமையான மாற்ற மாகும். மறைக்கல்வி ஆசிரியர்களும் மாணவர்களும் வழக்கமான, பாரம்பரிய மறைக்கல்வி முறையிலிருந்து இயங்கலை (online) வழிமுறையை ஏற்க வேண்டியிருந்தது. இது மறைக்கல்வி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் கூட இலகுவான செயலாக அமையவில்லை, இக்காலக் கட்டத்தில் தங்கள் பிள்ளைகள் தொடர்ந்து மறைக்கல்வி பெற அளித்த ஆதரவுக்கும் எடுத்துக் கொண்ட சிரமத்துக்கும் பெற்றோர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

**புதிய மறைக்கல்வி ஆண்டு.**

அன்புமிக்க பெற்றோர்களே,

நமது பிள்ளைகளின் மறைக்கல்வியானது திருஅவையின் வாழ்வோடும் தூதுரைப்பணி யோடும் ஒன்றிணைந்ததொன்றாகும். எனவே, எந்த சூழலிலும் இப்பணியை ஒத்தி வைப்பதோ அல்லது புறக்கணிப்பதோ கூடாது. இன்றைய நிலையில் கோவிட்-19 நிலைக்குறித்தும் எப்போது வகுப்பறைகளில் மறைக்கல்வி நடைபெறும் என்றோ திட்டவட்டமாகக் கூற இயலாது. ஆகவே, மாணவர்கள் zoom அல்லது Google Meet வாயிலாக மறைக்கல்வியைத் தொடர வேண்டும். இது குறித்து நான் உங்களோடு சில கருத்துக்களைப் பகிர விரும்புகிறேன்.

**உங்கள் பிள்ளைகளை மறைக்கல்விக்குப் பதிவு செய்தல்.**

அநேக பங்குகளில் மறைக்கல்வி வகுப்புக் களுக்கான மாணவர் பதிவு தொடங் கிவிட்டது. இதுவரை பதிவு செய்யாத வர்கள் உங்கள் பிள்ளைகளைப் பதிவுச் செய்ய வேண்டுகிறேன். உங்கள் பங்குத் தந்தையும் மறைக்கல்வி குழுவினரும் கூறும் வழிமுறைகளைப் பின்பற்றுங்கள். முதன்முறை உங்கள் பிள்ளையைப் பதிவு செய்வதாக இருந்தால், தயவுசெய்து பங்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்

இயங்கலை வழி பாடங்களில் உங்கள் பிள்ளைகள் பங்கெடுப்பதில் எழும் சில பிரச்சனைகளைச் சீர்த்தூக்கிப் பார்க்க வேண்டும்

**I.மறைக்கல்வி வகுப்பில் பங்கெடுப்பு**

அனைத்து மாணவர்களுக்கும் இணையத் தில் இயங்கலை வழி பாடங்களில், இணையவும், இதற்கான வசதியின்மையின் காரணத்தாலும் பங்கெடுக்க இயலாது என்பதை அறிவோம். மேற்கண்ட வசதிகள் உள்ள மாணவர்கள் அவசியம் இப்பாடங் களில் பங்கெடுக்க வேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் விசுவாச வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து, மறைக்கல்வி ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ள நாளில், குறிப்பிட்ட நேரத்தில் பாடங்களில் பங்கெடுக்க ஊக்குவிக்க வேண்டும்.

**II. ஆக்கப்பூர்வமான பங்கெடுப்பு**

இயங்கலை வாயிலாகப் பாடங்களில் பங்கெடுக்கும் வேளையில், சிலர் காணொளியை அடைத்து விட்டுகிறார்கள். இதனால் அவர்களின் முழுமையான பங்கெடுப்புப் பற்றி அறிய முடிவதில்லை. எனவே, பெற்றோர்கள் மாணவர்களின் ஆக்கப்பூர்வமான பங்கெடுப்பை உறுதிச் செய்யும் பொருட்டு தொடக்கமுதல் இறுதிவரை கண்காணிக்க வேண்டும்.

**III. பெற்றோரின் கண்காணிப்பும் வழிகாட்டுதலும்**

பாலர் பள்ளிகளிலும் தொடக்கநிலை பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களுக்குக் அதிகபடியான பெற்றோரின் கண்காணிப்பும் வழிகாட்டுதலும் அவசியமாகும். மறைக்கல்வி ஆசிரியர்களோடு பெற்றோர்களும் தங்களது பிள்ளைகள் இயங்கலை வாயிலாக விசுவாச வளர்ச்சிக்கான கல்வியைப் பெறுவதற்கு வழங்கும் ஒத்துழைப்பு பாராட்டுக்குரியது.

**IV. பெற்றோருக்கும் மறைக்கல்வி ஆசரியர்களுக்குமிடையிலான தொடர்பு**

முன்பு கூறியதைப் போல், மின்சாதன வசதிக்குறைவினால் சில மாணவர்கள் இயங்கலை வாயிலாக நடத்தப்படும் வகுப்புகளில் பங்குப் பெற இயலாமல் போகலாம். இத்தகைய்ச் சூழலில் பெற்றோர்கள் மறைக்கல்வி ஆசிரியர் களோடு தொடர்பு கொண்டு முறையான மறைக்கல்வியைப் பெற மாற்று வழிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இயங்கலை வாயிலாக மறைக்கல்வி வகுப்புகளை ஏற்பாடு செய்வதில் ஒவ்வொரு பங்கும் வெவ்வேறு வகையான பிரச்சனை



களை எதிர்நோக்கக்கூடும் என்பதை நான் அறிவேன். இருப்பினும், பங்கு மறைக்கல்வி குழுவினர் பங்குத்தந்தையோடு கலந்துரையாடி, பெற்றோர்களுடன் கலந்தாலோசித்து பங்கு அளவில் இறுதி முடிவெடுக்க வேண்டும்.

இறுதியாக, பெற்றோர்களே தங்கள் பிள்ளைகளுக்கு முதன்மையான மறைக் கல்வி ஆசிரியர்கள் என்பதை நினைவுறுத்த விரும்புகிறேன். எனவே, பெற்றோர்கள் பங்குத்தந்தையோடும், மறைக்கல்வி ஆசிரியர்களோடும் இணைந்து, பிள்ளை களுக்கான மறைக்கல்வி தொடர்வதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, பிள்ளைகள் கடவுளுடனான உறவிலும் கத்தோலிக்க நம்பிக்கையிலும் முதிர்ச்சியை நோக்கி வளர்ச்சியுற உதவிட வேண்டுகிறேன்.

**இப்படிக்கு.**
**பேராயர், ஜூலியன் லியாவ் பெங் கிம்,**
**மலேசிய மறைக்கல்வி ஆணையத்தின் தலைமைப் பொறுப்பாளர்.**

# நமதுள்ளம் கடவுள் வாழும் கோவில்

பெத்லேகமில் பிறந்து, நாசரேத்தூரில் வளர்ந்த இயேசு, தமது பணியின் மையமாக கப்பர்நாகுவைத் தேர்வு செய்கிறார். தொழுகைக்கூடத்தில் அவரது போதனையைக் கேட்டு மக்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள் எனக் கூறும் இன்றைய மாற்கு நற்செய்தி, அவரது போதனையை இங்கு விவரிக்கவில்லை. ஆனால் அங்கு தீய ஆவி பிடித்திருந்த ஒருவரை இயேசு குணப்படுத்துகிறார்.

கடந்த வார நற்செய்தியில், தம்மோடு அழைத்துக் கொண்ட சீடர்களுக்கு இன்றைய நற்செய்தியில் தாம் யார் என்பதைச் சூட்சமாகத் தெரிவிக்கிறார் இயேசு. "என் பின்னே வாருங்கள்; நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்"(1:17) என்பதை செயலில் காட்டுகிறார்.

இயேசு, போதனையை அதிகாரத்தோடு செய்தது போல் அங்கு தீய ஆவி பிடித்திருந்த ஒருவரை அதிகாரத்தோடு குணப்படுத்துகிறார். போதனையைக் கேட்டு வியந்த மக்கள் இயேசு ஓர் இறைவாக்கினராக இருக்கலாம் என மக்கள் எண்ணும் வேளையில் பிணி பிடித்தவனைக் குணப்படுத்துகிறார். தீய ஆவி பிடித்தவனைக் குணப்படுத்தும் செயல், அவர் இறைவாக்கினர் நிலையையும் தாண்டியவர் என்பதைக் காட்டுகிறது. உண்மையில் இயேசு யார் என்பதை சூழ்ந்திருக்கும் மக்களும் சீடர்களும் அறிந்திராமல் இருக்கும் போது அந்த தீய ஆவி இயேசு யார் என்பதற்குச் சாட்சியம் கூறுகின்றது. "நீர் யார் என எனக்குத் தெரியும். கடவுளுக்கு அர்ப்பணமானவர்"(1:24) என அந்த தீய ஆவி கூறுகிறது.

யோர்தான் ஆற்றங்கரையில் திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்ற போது இயேசுவின் மீது தூய ஆவியானவர் வந்திறங்கினார். இயேசுவில் உள்ளி-ருக்கும் தூய ஆவியானவர்க்கும் உலகில் இருக்கும் தீய ஆவிக்கும் இடையில் போர் முரசு கொட்டப்படுகிறது. தூய ஆவியாரைத் தன்னுள் கொண்டிருக்கும் இயேசு, மனிதன் மீது கடவுள் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தும் நற்செய்தியைக் கொண்டு வருகிறார். நற்செய்தி மனித மனதில் அன்பை விதைக்கிறது. ஆனால் தீய ஆவியோ மனித மனதில் ஆசைகளையும் கோபதாபங்களையும் தேங்கச் செய்கிறது. இதனால் குடும்பம், சமூகம், அரசியல், பொருளாதாரம் முதலிய எல்லாவற்றிலும் மனித வாழ்வு அல்லோலகல்லோலப்படுகிறது. இந்த பெருந்துயரிலிருந்து மனுக்குலத்தை நலப்படுத்த வந்த இயேசுவை ஏற்றுக் கொள்ள நாம் தயாராக இருக்கு வேண்டும் என இன்றைய திருப்பாடல் நினைவுறுத்துகிறது. "உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்"(திப.95:8). உலக ஆசைகளில் மனதை அலைய விடாமல், ஒரு நிலையில் வைத்திருக்க நாம் முழு மனத்தோடு ஆண்டவரிடம் பற்றுக் கொள்ள வேண்டும் என இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் அறிவுறுத்துகிறார்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை-அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" (குறள்350) என்பது நாம் அறிந்த குறள் வாக்கு. ஆசைகள் இல்லா ஆண்டவன் மீது ஆசை கொள்வது நமது ஆசைகளை விடுவதற்கே என வள்ளுவம் கூறுகிறது. நம் மீது முழுமையாக அன்பு வைத்த இறைவன் தம் அன்பு மகனை நமக்காக, மனுக்குல மீட்புக்கான கல்வாரி சிலுவையில் ஒப்புக் கொடுத்தார். அவரது அன்புக்கு நாம் ஓரளவாவது பிரதி அன்பு காட்டுவோம்.

இறையன்பு நிறைந்திருக்கும் உள்ளத்தில் தூய ஆவியானவர் குடிக்கொள்கிறார். ஏனெனில் "நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா?"(1கொரி.3:16). என பவுல் அடிகள் எழுப்பும் கேள்வி இன்றைக்கும் நமக்குரியதாக உள்ளது. தூய ஆவியாருக்குரியதாக நமதுள்ளம் தூய்மை பெறட்டும்.

*எட்மண் பல்தசார், செராஸ்*

**பொதுக்காலத்தின் 4-ஆம் ஞாயிறு**
இச 18: 15-20
திபா 94:1-2.6-7.8-9
1 கொரி 7: 32-35
மாற்கு 1: 21b-26
**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : வாரம் 4**